# ஏர்போர்ட்-கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரயில் வழித்தடம் நீட்டிப்பு

## கவர்னர் உரையில் அறிவிப்பு



சென்னை, ஜன. 6-

தமிழக சட்டசபை இன்று காலை கூடியது. கூட்டம் தொடங்கியதும் கவர்னர் பன்வாரிலால் புரோகித் உரையாற்றினார். அதில் கூறியிருப்பதாவது:

ஆசிய வங்கி நிதியுதவியுடன் ரூ.6,448 கோடி மதிப்பீட்டில் சென்னை-கன்னியாகுமரி தொழில் வழித்தடத்திலான பயன்பாட்டை கூடிய பகுதியில் சாலைகளை தரம் உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவியுடன் ரூ.2673.42 கோடி மதிப்பீட்டில் எண்ணூர் துறைமுகத்தில் இருந்து தச்சூர் வரையிலான சென்னை வெளிவட்ட சாலையின் திட்டம் முதல்கட்டமாக தொடங்கப்பட்டுள்ளது. இச்சாலையின் மீதமுள்ள பகுதிகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

அரசு மேற்கொண்ட பல முயற்சிகளின் பயனாக 2016ம் ஆண்டில் 71431 ஆக இருந்த சாலை விபத்துகளின் எண்ணிக்கை 2019ம் ஆண்டில் 63923 ஆகவும், சாலை விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2016ம் ஆண்டில் 16092ல் இருந்து 2019ம் ஆண்டில் 11378 ஆகவும் குறைந்துள்ளது. சாலை விபத்துக்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2016ம் ஆண்டில் இருந்து 10 ஆயிரம் வாகனங்களுக்கு சராசரியாக 12 ஆக இருந்தது 2019ம் ஆண்டில் இது 3 ஆக குறைந்துள்ளது.

• நாளொன்றுக்கு 1.63 கோடி பயணிகள் மாநில போக்குவரத்து பஸ்களில் பயணம் மேற்கொள்கின்றனர். இந்த பொது போக்குவரத்தின் பயணத்தின் பங்கை மேலும் அதிகரிப்பதில் அரசு உறுதியாக உள்ளது. இந்திய அரசின் (Fame-2) திட்டம் மற்றும் ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் மாநில போக்குவரத்து கழகங்கள் மின்சார வாகனங்களை பெருமளவில் இயக்க உள்ளன.

• சென்னை மெட்ரோ ரயில் முதல்கட்டம் முழுமையாக முடிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. திருவொற்றியூர், விம்கோ நகர் வரையிலான முதல் கட்ட நீட்டிப்பு பணிகள் இந்தாண்டு மத்தியில் நிறைவடையும். மேலும் ரூ.69,180 கோடி செலவில் 118.9 கி.மீ நீளத்துக்கு 3 வழித்தடங்களை அமைக்கும் 2ம் கட்ட திட்ட பணிகளை செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 2ம் கட்ட பணியில் 52.01 கி.மீ நீளத்துக்கு நிதியுதவி அளித்திட ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை ஒப்புதல் அளித்து முதல் தவணைக்கான கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. 2ம் கட்டத்தின் மீதமுள்ள வழித்தடத்திற்காக ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய வளர்ச்சி வங்கி ஆகிய பன்னாட்டு நிதி உதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதல்கட்டத்தில் 50 சதவீத பங்கு மூலதன தொகையை மத்திய அரசு வழங்கியது போல, 2ம் கட்ட திட்டத்திலும் 50 சதவீத பங்களிப்பிற்கான ஒப்புதலை மத்திய அரசு விரைவில் வழங்கிட வேண்டும். சாத்திய கூறு ஆய்வின் அடிப்படையில் சென்னை விமான நிலையத்தில் இருந்து புதிய புறநகர் பஸ் நிலையம் அமைய இருக்கும் கிளாம்பாக்கம் வரையிலான 15.3 கி.மீ தூரத்துக்கு மெட்ரோ ரயில் வழித்தடத்தை நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது. தாம்பரம்-வேளச்சேரி வழித்தடத்தில் ஏற்படும் அதிகமான போக்குவரத்து நெரிசலை சமாளிப்பதற்கு 15.5 கி.மீ நீளத்துக்கு ரயில் போக்குவரத்து முறை ஒன்றினை அரசு அமைக்கும். இதற்கான விரிவான சாத்தியக்கூறுகள் மற்றும் திட்ட அறிக்கை சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தயாரிக்கும்.

• பிரதம மந்திரியின் நகர்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ரூ.31,252.95 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டில் 6.94 லட்சம் குடியிருப்புகளை கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட பொது கட்டிட மற்றும் வளர்ச்சி விதிகள், இயலக்கூடிய விலையில் வீடுகளை வாங்குவதற்கு உத்வேகத்தை அளித்துள்ளது.

• டெங்கு, மலேரியா மற்றும் சிக்குன் குனியா போன்ற கொசுக்களால் பரவும் நோய்களை தடுக்க முதல்வரால் அறிவித்தபடி பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய பகுதிகளில் உள்ள அனைத்து ஏழை குடும்பங்களுக்கும் விலையில்லா கொசு வலைகள் விநியோகிக்கப்படும்.

• ராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், நாமக்கல், திருப்பூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 9 புதிய மருத்துவ கல்லூரிகளை நிறுவுவதற்கான பணிகள் ரூ.3227.25 கோடி செலவில் இந்தாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

• அண்ணா பல்கலைக்கழகத்தை ஒப்புயர்வு உயர்கல்வி நிறுவனமாக மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் மாநில சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மாநில பொதுப்பல்கலைக்கழகமாக இருந்து வருவதன் காரணமாக ஒப்புயர்வு உயர்கல்வி நிறுவனம் என்ற தகுதி நிலையை அடைந்த பின்னரும் கூட, தொடர்ந்து மாநில சட்டத்தின் கீழ் இயங்குமா, மாநில இட ஒதுக்கீடு கொள்கை தொடர்ந்து அதற்கு பொருந்தும் என்று மத்திய அரசு தெளிவுபடுத்தி உள்ளது. இதுகுறித்து ஆய்வு செய்ய 5 அமைச்சர்கள் கொண்ட குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உரிய முடிவு எடுக்கப்படும்.

• தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் ஒரு சிறப்பு முயற்சி அரசு தொடங்கி, கல்லூரி இடைநிற்றல் மாணவர்களின் 1 லட்சம் நபர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்கப்படும். இதனால் அவர்கள், தங்களது உயர்கல்வி பயிற்சியை நிறைவு செய்யலாம். அல்லது உரிய வேலை வாய்ப்பினை கண்டறியலாம்.

• 2019-20ம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள சுய உதவி குழுக்களுக்கு ரூ.12,500 கோடி அளவுக்கு கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

• தமிழகமக்கள் தொகையில் மூத்த குடிமக்களின் விகிதாச்சாரம் உயர்ந்து வருகிறது. மாதம் ஒன்றுக்கு ரூ.1000 ஓய்வூதியம் வழங்கிடும் 5 சமூக பாதுகாப்பு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த ஓய்வூதியர்களின் எண்ணிக்கை 29.80 லட்சமாகும். நடப்பாண்டு முதல் தகுதி வாய்ந்த மேலும் 5 லட்சம் பேருக்கு சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படும். சமூக பாதுகாப்பு முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வறுமை நிலையை கணக்கிடுவதற்கான அளவுகோலை அரசு தளர்த்தியுள்ளது. அதன்படி, பயனாளிகளுக்கு சொந்தமான அசையா சொத்து மதிப்பின் வரம்பு ரூ.50 ஆயிரத்தில் இருந்து ரூ.1 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. அசையா சொத்தின் வரையறையில், இலவச வீடு வழங்கும் திட்டத்தில் அரசிடம் இருந்து பெறப்பட்ட வீடு சேர்க்கப்படமாட்டாது.

• சமூக நீதியை காப்பதில் அரசு உறுதி கொண்டுள்ளது. ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான மாநிலத்தில் நடைமுறையில் உள்ள 69 சதவீத இடஒதுக்கீட்டை முழுமையாக பாதுகாக்கும் இடஒதுக்கீடு உறுதி செய்யப்படுவதுடன் அனைத்து நிலைகளிலும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், தகுந்த பணியிடங்கள் அடையாளம் கண்டறியப்பட்டுள்ளன.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

குடியுரிமை

CS CamScanner